1993 ஏபரல் 2]

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சீதோஷ்ணநிலையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அந்தந்தப் பகுதிகளில் எந்தெந்த மரங்களை நடலாம் என்பதைப் பரிசீலித்து நடுவதுடன், பயனுள்ள பழம் தருகின்ற அல்லது முந்திரிக் கொட்டை போன்ற மரங்களை நட்டால் ஒருவேளை பொது மக்கள் அதைப் பேணிக் பாதுகாக்கக்கூடும். எனவே இந்த சமூகநலத் திட்டத்தைப் பொறுத்த வரையில் வீட்டுக்கு ஒரு மரம் நடுதல் என்று சொல்கிற அளவுக்கு தமிழகத்திலே ஒரு புதிய திட்டத்தை அரசாங்கம் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டிலே வீட்டுக்கு ஒரு மரம் நட வேண்டும் என்று பல ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழங்கள் தருகிற மரங்கள் நடப்படுமா என்று கேட்டார்கள். நீங்கள் 6-ஆம் தேதி எதிர்பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 228, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

228—

ரமணிமுதலிபுதூரில் நெசவாளர்களுக்காக வழங்கப்பட்ட சலுகைகள்.

*10401— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் ரமணிமுதலிபுதூரில் நெசவாளர்களுக்காக இதுவரையில் இத்துறையின் மூலம் வழங்கப்பட்ட சலுகைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி ரமணிமுதலிபுதூரிலுள்ள 72 நெசவாளர்களில் 58 பேர், சமத்தூர் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடைந்து வரு

கிறார்கள். மேலும் பங்குத்தொகை கடன் வழங்கும் திட்டம், தறிகள் நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் மூலம் பயன் அடைந்து வருகிறார்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரமணிமுதலிபுதூரில் உள்ள நெசவாளர்களுக்கு அவர்களுடைய நெசவுத் தொழிலைச் செய்வதற்கான போதிய இடம் இல்லை என்பதை அரசு அறியுமா? ஆமெனில், இத் துறையின் மூலமாக இடவசதி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட வசதி செய்து தருகின்ற திட்டம் எதுவும் தற்போது கைத்தறித் துறையில் இல்லை. கைத்தறி நெசவாளர்களாகவே இடத்தைத் தருவார்களானால் அவர் களுக்குத் தறியுடன் சேர்ந்த வீடு கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் தற்போது இருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவை தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் மாத ஓய்வூதியம் எத்தனை பேர் களுக்கு அப்பகுதியிலே வழங்கப்படுகிறது என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் ஓய்வூதியம் அல்ல. நெச வாளர்கள் பணியில் இருக்கின்றபோது இறந்துவிடுவார்களானால் அவர்களுக்கு ஊதியம், அதாவது பென்ஷன் ஸ்கீம்-ஆக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் அந்தப் பகுதியில் யாருக் கும் தந்ததாக குறிப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 229, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,